**OS.No.85/2019 DW-1 திருமதி.அம்பிகா 18.11.2024**

**சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** வாதி சௌந்தரராஜன் எனக்கு நன்கு பழக்கமானவர் என்று சொன்னால் சரியல்ல. அவர் யார் என்றே எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக அவர் எனக்கு அறிவிப்பு கொடுத்திருந்தார் என்றால் கொடுக்கவில்லை.

2) இந்த வழக்கில் நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எதிர்வழக்குரை தாக்கல் செய்த காலகட்டத்தில் ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

3) எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு முன்பு கடனுறுதிச்சீட்டினை நீதிமன்றத்தில் அனுமதி பெற்று பார்த்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் என்ன விவரம் கூறியுள்ளேன் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சாட்சி மீண்டும் வாதியை யார் என்றே தெரியாது என்றும், நான் அவரிடம் கைநீட்டி பணம் எதுவும் வாங்கவில்லை என்று கூறியுள்ளதாக கூறுகிறார்.

4) என்னிடம் காட்டப்படும் எதிர்வழக்குரையிலுள்ள கையொப்பம், வக்காலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். ஆனால், என்னிடம் காட்டப்படும் வழக்கு கடனுறுதிச்சீட்டிலுள்ள கையொப்பம் என்னுடையது அல்ல.

5) வாதியை எனக்கு யார் என்றே தெரியாது. வாதியிடம் நான் எந்த ஒரு தொகையும் வாங்கவில்லை. வாதி என் மீது ஜோடித்து தாக்கல் செய்தது சம்மந்தமாக வாதி மீது ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்தேன். நடவடிக்கை எடுத்தது சம்மந்தமான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

6) வழக்கு கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்பதை நிரூபிக்க ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன். வாதி வழக்கு தாக்கல் செய்து முதன் விசாரணை எப்போது முடிக்கப்படுகிறது என்று எனக்கு

தெரியாது.

7) இந்த வழக்கை நான் இழுத்துஅடிக்க வேண்டும் என்பதற்காக நான் என்எல்சியில் லோன் வாங்கியது சம்மந்தமான ஆவணங்களை வரவழைக்க மனு தாக்கல் செய்து என்எல்சியினர் அந்த மனுக்கள் அழிக்கப்பட்டது தெரிந்துகொண்டே இந்த மனுவினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

8) வழக்கு சம்மந்தமாக ஜோதிமணி என்பவர் மீது நடவடிக்கை எடுத்ததற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

9) நான் வாதியிடம் பணத்தை பெற்றுகொண்டு வழக்கு கடனுறுதிச்சீட்டை எழுதி கொடுத்துவிட்டு தற்போது வாதியை யார் என்றே தெரியாது என்று பொய்கட்சியாடி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

10) தற்போது தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்களை என்னுடைய எதிருரை தாக்கல் செய்த காலகட்டத்தில் தாக்கல் செய்திருப்பேன். தற்போது வழக்கிற்காக இந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

11) தற்போது நான் ஓய்வு பெற்ற ஓய்வு ஊதிய பணபலன்களை பெறுவதற்காக நான் இந்தர வழக்கினை நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

12) தாவாப்படி நான் வாதிக்கு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**